

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருள்மிகு நாச்சியார் ஆண்டாள் திருக்கோயில் ஆடிப்பூர தேர்த்திருவிழா நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ சுகபுத்ரா தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் மற்றும் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் திருத்தேரோட்டத்தினை வடம் பிடித்து துவக்கி வைத்தனர். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், இராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், கூவர் கூட்டம் கிராமத்தைச் சேர்ந்த நபர்கள் டிராக்டரில் சென்று கொண்டிருந்த பொழுது ஏற்பட்ட விபத்தில் மூன்று பெண்கள் உயிரிழந்ததையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று இலட்சத்திற்கான காசோலை வழங்கி ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் உள்ளார்.

### இன்று (29ம்தேதி) காரைக்குடியில்

# சிவகங்கை மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் நடைபெறுகிறது!

சிவகங்கை. ஜுலை 29.

இன்று (29ஆம் தேதி) சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து சிவகங்கை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ள தாவது.

கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் ஆணையின் பேரில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் மாவட்டம் தோறும் இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றுவருகின்றது .அதன் தொடர்ச்சியாக இன்று 29ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் காரைக்குடியில் அபூர்வ மகாலில் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுற வுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் தலைமையில் மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி. ராஜா முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் முன்னிலையில் இக்கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருட்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே அனைத்து மாவட்ட ஒன்றிய, நகர,பேரூர், கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கூட்டத்தில் விவாதிக்க ப்படும் பொருட் கள்.

பொருள் :

திராவிட மாடல்ஆட்சியின் நான்காண்டு சாதனைகள் குறித்து மக்களிடம் வீடுவீடாகச் சென்று விளக்குதல்.

'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் குறித்து.

கிளைக் கழகங்களில் இளைஞரணி நிர்வாகிகள் தேர்வு செய்தல் குறித்து. அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்தகவலை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

### மூத்த குடிமக்களுக்கான 'ஆயுஸ்மான்'

# மக்கள் சுகாதாரத் திட்டம், தமிழ் நாட்டில் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா?

## மக்களவையில் — டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஜுலை 29-

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 25 ஜுலை 2025 அன்று மக்களவையில், 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான ஆயூஸ்மான் பாரத் பிரதம மந்திரி மக்கள் சுகாதாரத் திட்டம், தமிழ்நாட்டில் முறையாகச் செயல்படுத்த படுகிறதா? என்றும், மத்திய அரசின் சுகாதாரத் திட்டத்தின் பயனாளிகளும் ஆயூஸ்மான் திட்டத்தில் சேர இயலுமா? என்றும், இதற்கான நிதி ஒதுக்கீடு விவரங்களை தெரிவிக்க இயலுமா? என்றும், ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை இணையமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு : -

எழுபது வயதிற்கும் மேற்பட்ட17 இலட்சத்திற்கும் அதிகமான, மூத்த குடிமக்களுக்கு, தமிழ்நாட்டில், ஆயூஸ்மான் வந்தனா அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மத்தியி அரசின் சுகாதார திட்ட பயனாளிகள், தேவைப்பட்டால் இந்த புதிய திட்டத்திற்கு தங்கள் பெயரை மாற்றிக் கொள்ளலாம் என்றும், ஆனால் ஏதாவது ஒரு திட்டத்தில் தான் மூத்த குடிமக்கள் சேர இயலும்.

மேலும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான மூத்த குடிமக்கள் சுகாதாரத் திட்டத்திற்கு தமிழ் நாட்டிற்கென ரூபாய் 2165 கோடிகள் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. தேவைக்கேற்ப, தேசிய சுகாதார ஆணையம் மாநிலங்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.



திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையினால் நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.முன்னிலையில் நெல்லை மாவட்ட பா.ஜ.க. விளையாட்டு மேம்பாட்டு அணி துறை தலைவர் மாசாணமுத்து தலைமையில் 30 வது வார்டு கைலாசபுரம் துவரை ஆபீஸ் பகுதியைச் சேர்ந்த சுமார் 400 பேர் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். அவர்கள் அனைவருக்கும் கழக இரு வண்ண சால்வை அணிவித்து உறுப்பினர் படிவம் வழங்கப்பட்டது. உடன் மேயர் ராமகிருஷ்ணன், மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ், மாநகர பொறுப்பாளர் கிழக்கு தினேஷ், துணைச் செயலாளர் சுதாமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர். சங்கர், கந்தன், கோகுலவாணி, சகாய ஜோலியேட் மேரி, தகவல் தொழில் நுட்ப அணி காசிமணி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க.

# தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆலோசனை வழங்கினார்!

நெல்லை, ஜுலை 29 -

நெல்லை மத்திய மற்றும் நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பாளையங்கோட்டை கே.டி.சி நகரில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெற்றது.இந்நிகழ்வில் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி ராஜா பங்கேற்று 2026 சட்டமன்றத் தேர்தல் உறுப்பினர் சேர்க்கை உள்ளிட்ட பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி பேசினார்.

முன்னதாக அமைச்சர் டி.ஆர்.பி ராஜா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

வரலாற்றில் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் மகத்தான தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்கள் தென்தமிழகத்திற்கு தொழில் வளர்ச்சியை உறுதி செய்து உள்ளார்

தென்காசி மாவட்டத்திற்காக முதன்முதலில் அறிவிக்கப்பட்ட சிப்காட் இடத்தைத் தேர்வு செய்யும் பணியை நேற்று முன்தினம் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளேன். மேலும், நெல்லை கங்கைகொண்டான் சிப்காட்டில் பல்வேறு புதிய திட்டங்கள் வர உள்ளன.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் டைடல் பார்க்கள் மூலமாக புதிய நியோ டைடல் பார்க்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, தமிழக இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

தமிழகத்தின் முதல் நியோ டைடல் பார்க் அமைக்கும் பணி கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகளை உருவாக்க முடியாததால், சுற்றுலா சார்ந்த தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்து ல்வகாப் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநகர பொறுப்பாளர் கிழக்கு தினேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் திண்டிவனம் அரசு கலைக் கல்லூரி

# மாணவர்களிடத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை விழிப்புணர்வுப் பிரச்சாரம்!

## செஞ்சி மஸ்தான் எம்,எல்,ஏ, தொடங்கி வைத்தார்! மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை!

திண்டிவனம், ஜுலை 29 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்திண்டிவனம் அரசு கலைக் கல்லூரி வளாகம் எதிரி 'ஓரணியில் தமிழ்நாடு' கல்லூரி மாணவர்களி டத்தில் உறுப்பினர் சேர்க்கை விழிப்புணர்வு பிரச்சாரத்தை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்கினார்.

கழக மாணவரணி சார்பில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர் சேர்க்கை இயக்கம் குறித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள உயர் கல்வி நிறுவனங்கள் கல்லூரி மாணவர்களிடையே மாநில மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளின் மாணவர் அணி நிர்வாகிகள் மூலம் துண்டு பிரசுரங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் உத்தரவிட்டனர்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் திண்டிவனம் ஆ. கோவிந்தசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தின்எதிரில் மாணவர்களிடையே 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது.

நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி,மு,க, மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்கினார்.

மாவட்டத் துணை அமைப்பாளர்கள் மதிவாணன், ஞானசேகரன், சுபாஷ், பெனாசிர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராமன்அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. கலந்துகொண்டு கழக அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும்உயர் கல்வி படிக்கும் மாணவ மாணவிகளுக்கா திமுகஅரசு செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மற்றும் சலுகைகள் குறித்து மாணவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டு அவர்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி னார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், முன்னாள் நகர செயலாளர் கபிலன்,மயிலம் வடக்கு செயலாளர் மணிமாறன், மாவட்ட கவுன்சிலர் மனோ சித்ரா ராஜேஸ்வரன், ஆரணி தொகுதி பார்வையாளர் அண்ணாதுரை, தொண்டரணி அணி அமைப்பாளர் ராஜசக்தி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.டி. பாபு, மயிலம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சம்சுதீன்,மாவட்ட வரதகரணி துணை அமைப்பாளர் ஆடிட்டர் பிரகாஷ், நகர துணை செயலாளர் கௌதமன், மருத்துவ அணி துணை அமைப்பாளர் சூரிய பிரகாஷ், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், உருளைகுடி ஊராட்சி, பீக்கிலிபட்டி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.25லட்சம் மதிப்பீட்டில் உணவு அருந்தும் கூடம் கட்டுவதற்கு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் அடிக்கல் நாட்டினார்.நிகழ்வில் கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீதக்கண்ணன், கோவில்பட்டி மத்திய ஒன்றிய செயலாளர் பீக்கிலிபட்டிமுருகேசன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் தங்கமாரியம்மாள், தமிழ்ச்செல்வன், உட்பட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.